## Principal District Munsif Court, Sankarankovil.

தேதி : 13.07.2022
அ.வ.எண். 221/2016
வா.சா.1

<u>வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாண வாக்குமூலத்தின்பேரில் 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:–

நான் 7ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும். எனக்கு தாவா சொத்தின் சர்வே நம்பர் எதுவும் தெரியாது. எத்தனை அயிட்ட சொத்து என்ற விபரம் எனக்கு தெரியாது. தாவா சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது. என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது அப்பாவின் சொத்து எங்களுக்கு வேண்டுமென்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது அப்பாவின் உடன் பிறந்த சகோதரர் 1ம் பிரதிவாதி குருசாமி ஆவார். என் அப்பாவும் எனது பெரியப்பாவும் முத்துசாமி கோனார் அவர்களின் பாத்தியப்பட்ட சொத்தை வாய்மொழியாக பிரித்து கொண்டனர் என்ற விபரத்தை இந்த வழக்கில் நான் கூறியுள்ளேன். மேற்படி வாய்மொழி பாகப்பிரிவினை அடிப்படையில் எனது அப்பா பெயருக்கோ அல்லது பெரியப்பா பெயருக்கோ தனிப்பட்டா ஏற்படவில்லை. மேற்படி தாவா சொத்து யார் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் எனத தாத்தா பாட்டி பெயரில் பட்டா இருந்தது. வா.சா.ஆ1 பட்டாவில் எந்தெந்த சொத்து யார் யார் பெயரில் பட்டா இருக்கிறது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ1 எனது அப்பா அம்மா எனக்.கு எழுதிகொடுத்தார்கள். அந்த சொத்தின் சர்வே நம்பர் தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ1 ல் உள்ள சொத்து எனது அப்பா அம்மமாவுக்கு எப்படி பாத்தியப்பட்டது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ1 ஏற்பாடு ஆவணத்தில் உள்ள சொத்தை எழுதி கொடுப்பதற்கு எனது அப்பா அம்மாவுக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தை மோசடி செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் உற்பத்தி செய்யப்பட்டது தான் வா.சா.ஆ1 என்றால் சரியல்ல. வா.சா.ஆ1 ஊர்ஜிதத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல. அதை அனுசரித்து எனத பெயரில் பட்டா எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ 2 உள்ள சொத்து எனது பெற்றோருக்கு எப்படி பாத்தியப்பட்டது என்றும் சர்வே நம்பர்

எனக்கு தெரியாது. வா.சா.ஆ 2 மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால்சரியல்ல. அந்த ஆவணமும் எங்கள் காலத்தில் ஊர்ஜிதத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல. அந்த ஆவணங்களை அனுசரித்து எனது பெயருக்கு பட்டா எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ 1,2 ஆவணங்களை பிரதிவாதிகளை எந்தவிதத்திலும் கட்டுப்படுத்தக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. எனது தாத்தா குருசாமி கோனார் மற்றும் பாட்டி பெயர் ராமாத்தாள் என்றால் சரிதான். எனது தாத்தா பாட்டிக்கு பாத்தியப்பட்ட சொத்து சர்வே என் 321/12 ஏ, 322/3,4,5,6 ஏ ,322/3, 323/1 , 540/1, 628/21, 409/6, 328/2 ஏ, 328/2 பி, 328/2 சி, 327/4, 430/1 ஆகிய சொத்துக்கள் தனித்து பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஆகும். சர்வே நம்பர் 430/1, கதவு எண். 61 1ம் பிரதிவாதியின் மனைவி பேச்சியம்மாளுக்கு 18.08.1995 ஏற்பட்ட உயில் மூலமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு அவர்கள் கூறுகிறார்கள் ஆனால் உண்மை இல்லை. அவ்வாறு எனது தாத்தா பாட்டி எழுதி வைத்த உயில் மூலமாக 1ம் பிரதிவாதி மனைவி பேச்சியம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்து அவர்கள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் அப்படி தான் அவர்கள் அனுபவித்து வருகிறார்கள் என்று கூறி எங்களை அனுபவிக்க மறுக்கிறார்கள். அப்படி 1ம் பிரதிவாதி மனைவி பேச்சியம்மாளுக்கு க்கு உயில் மூலம் கிடைத்த சொத்தை தனத மகள் 2ம் பிரதிவாதிக்நகு 12.011.2010 ம் தேதி செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் அப்படிதான் அவர்கள் நாங்கள் நிலத்தில்போய் நிற்கும்போது கூறினார்கள். அதனால் தான் இந்த வழக்கை தாக்கல் செய்தோம். அவ்வாறு செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் சர்வே எண். 321/12 ஏ, 322/3,4 ஏ, 323/3 ல் உள்ள கிணறு, 322/1 பி. ஆகிய சொத்துக்கள் 2ம பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான். அதன் அடிப்படையில் 2ம் பிரதிவாதிக்கு தனிப்பட்டா உள்ளது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்,323/1ல் மேல்பக்க கிணறு 4 செண்ட் மீதமுள்ள 2 ஏக்கர் 20 செண்டில் பாதி 1 ஏக்கர் 10 செண்ட் 1ம் பிரதிவாதிக்கு மீதமுள்ள சொத்து வாதியின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் எனது அப்பாவுக்கும் பெரியப்பாவுக்கும் பாதி பாதி பாத்தியம் கிடைத்தது. அவ்வாறு 1ம் பிரதிவாதிக்கு கிடைத்த சொத்தை அவர்கள் மக்களான மாரியம்மாள், பூமாரியம்மாள், பேச்சியம்மாள், ராமலட்சுமி அனைவரும் சேர்ந்து 16.11.2010ம் தேதி பாகபாத்திய விடுதலை ஆவணம் 2ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்தி கொடுத்தார்களா

என்றால் அப்படி ஏதுவும் ஏற்படுத்தி கொடுக்கவில்லை ஆனால் அவர்கள் தான் அப்படி கூறுகிறார்கள். இவ்வழக்கில் 1ம் பிரதிவாதியின் மக்களான மாரியம்மாள், பூமாரியம்மாள், பேச்சியம்மாள், ஆகியோர்களை கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். ராமலட்சுமி மற்றும் முருகேஸ்வரியை மற்றும் வழக்கில் சேர்த்துள்ளோம். மேற்சொன்ன மாரியம்மாள், பூமாரியம்மாள், பேச்சியம்மாள் வழக்கில் அவசிய கட்சி ஆவார்கள். அவர்களை சேர்க்காமல் வழக்கை தாக்கல் செய்துள்ளது அவசிய கட்சி சேர்க்காத தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது அப்பாவின் உடன் பிறந்தவர்கள் தான் முத்துசெல்வம் மற்றும் சுந்தரம்மாள். முத்துசெல்வம் எனது அப்பாவிற்கும் 1ம் பிரதிவாதிக்கும் சொத்தில் பங்கு கேட்டு நோட்டீஸ் அனுப்பினாரா என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வழக்கறிஞர் அறிவிப்பில் எனது அப்பா பெயர் இருக்கிறதா என்றால் இருக்கிறது. அது பி.வா.சா.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு அந்த அறிவிப்புக்கு 1ம் பிரதிவாதி குருசாமி கோனார் பதில் அறிவிப்பு கொடுத்தார் என்றால் சரிதான். நானும் என் அத்தையும் பேச்சுவார்த்தை இல்லாமல்தான் இருக்கிறோம். என்னிடம் காட்டப்படும் எனது அத்தை அனுப்பிய வழக்கறிஞர் நோட்டிஸில் காட்டப்பட்டுள்ள சொத்துக்கள் அனைத்தையும் இந்த தாவா வழக்கில் காட்டியுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்தில் எனக்கு எந்த பாத்தியமும் கிடையாது பிரதிவாதியை கஷ்டப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வழக்கை தாக்கல் செய்து வந்ததற்கு எந்த உரிமையும் பாத்தியதையும் கிடையாது என்றால் சரியல்ல. வழக்கை தாக்கல் செய்வதற்கு எந்த வியாஜ்ஜிய மூலம் கிடையாது என்றால் சரியல்ல. வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கில் நான் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**